2. வினாக்கள்— விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

சித்தப்பட்டினம் கால்வாய்த் திட்டம்.

382—(*வினா எண் 19337)—திரு. ஆர். சுந்தரமூர்த்தி : மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னாற்காடு மாவட்டம், திருக்கோவிலூர் தாலுகா முகையூர் ஊராட்சி ஒன்றியப் பகுதியில் ''சித்தப்பட்டினம் கால்வாய்த் திட்டம்'' செயல்படுத்தத் திட்டம் உண்டா ?

(ஆ) ஆம் எனில், அந்தக் கால்வாய்க்கு சாத்தனூர் அணையிலிருந்து தண்ணீர் விடப்படுமா ?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : (அ) ஆம்.
(ஆ) ஆம்.

திரு. எல். இளையபெருமாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கால்வாய்த் திட்டம் நல்ல முறையில் விவசாயிகளுக்கு உதவும், அங்கு உணவு உற்பத்திக்கு உபயோகமாக இருக்கும் என்று சொல்லியும், நீண்ட காலதாமதம் ஆவதற்கு, என்ன காரணம் ? இல்லையென்றால், என்ன காரணத்தினால், அது அமல் படுத்தப்படாமல் இருக்கிறது?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென்னாற்காடு மாவட்டம் திருக்கோவிலூர் தாலுகா, முகையூர் ஊராட்சி ஒன்றிய பகுதியில் ''சித்தப்பட்டினம்'' ஏரியை நவீனப்படுத்துவதில் எந்தவிதமான சிக்கலும் இருப்பதாகத் தெரியவில்லை. தலைமைப் பொறியாளர் ஆய்வில் இத்திட்டம் இருக்கிறது. ஆய்வு முடிந்த பிறகுதான் எதையும் சொல்லமுடியும்.

சாத்தூர் ஏரிக்கு வரும் வரத்துக் கால்வாயில் செய்யப்பட்டுள்ள ஆக்கிரமிப்புகள்.

383—(*வினா எண் 19923)—திரு. ஏ. எம். சேதுராமன்: மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆற்காடு தாலுகா சாத்தூர் ஏரிக்கு வரும் மூன்று கண்மாய்களையுடைய வரத்துக் கால்வாயைப் பக்கத்திலுள்ள பட்டாதாரர்கள் தங்களுடைய நிலத்தோடு ஆக்கிரமித்து, கால்வாயைத் தூர்த்துவிட்டதை அரசு அறியுமா?